**செய்தி வெளியீடு எண்:238** **நாள்:28.04.2021**

## <u>செய்தி வெளியீடு</u>

பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் தமிழ்த் தொண்டைப் போற்றிச் சிறப்பிக்கும் வகையில் ஆண்டுதோறும் அவரது பிறந்த நாளான ஏப்ரல் 29ஆம் நாள் தமிழ்க் கவிஞர் நாளாகக் கொண்டாட தமிழ்நாடு அரசால் ஆணையிடப்பட்டு கொண்டாடப்பட்டு வருகிறது. அவ்வகையில் பாவேந்தர் பாரதிதாசனின் 130ஆவது பிறந்தநாளினை 29.04.2021 ஆம் நாளன்று தீ நுண்மி இரண்டாவது அலைக் காரணமாக விழாவாகக் கொண்டாடாத நிலையுள்ளது. எனவே 29.04.2021 ஆம் நாளன்று முற்பகல் 11 மணி முதல் இணைய வழி நிகழ்வாகக் கொண்டாடப்படவுள்ளது. இவ்விழாவில் தமிழ் வளர்ச்சி இயக்குநர் முனைவர் கோ. விசயராகவன் அவர்கள் தலைமையுரையும், தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர் திரு.ம.சி தியாகராசன் அவர்கள் வரவேற்புரையும் மற்றும் முனைவர் பால. இரமணி, முனைவர் ந.அருள், முனைவர் உலகநாயகி பழனி, திரு.பழ.பாசுகரன், திரு.கோ.மணி, வழக்கறிஞர் முனீசுவரன் ஆகியோர் சிறப்புரையும் ஆற்றவுள்ளனர். மேலும் முனைவர் ச.சச்சிதானந்தம்(பிரான்சு), திரு.பொ.இராசேந்திரன் (மலேசியா), திரு.செல்வக்குமார் பெரியசாமி (செருமன்) ஆகியோர் கருத்துரை வழங்கவுள்ளனர். தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர் (தமிழ்) திருமதி தே. செயசோதி அவர்கள் நன்றியுரை வழங்கவுள்ளார். இந்நிகழ்ச்சியை இணைய வழியில் சென்னை வேல்ஸ் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறை பேராசிரியர் இரா.பன்னிருகை வடிவேலன் அவர்கள் ஒருங்கிணைப்பு செய்யவுள்ளார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**